மதுரை வடக்கு மாவட்ட முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர், கழக கலை - இலக்கிய பகுத்தறிவுப் பேரவை

# மாநில துணைச் செயலாளர் வீரகணேசன் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 9 -

மதுரை வடக்கு மாவட்ட முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளரும் கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில துணைச் செயலாளருமான வீர கணேசன் (வயது 66) அவர்கள் நேற்று முன்தினம் (07.10.2025) காலை 11.30 மணியளவில் உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.



முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

"வீரகணேசன் அவர்கள் உடல் நலக் குறைவால் மறைவுற்றார் என்ற செய்தியறிந்ததும் மிகுந்த துயருற்றேன்.

மதுரை மாவட்டம் வாடிப்பாடி ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராகவும், தொடர்ந்து ஒன்றுபட்ட மதுரை மாவட்ட இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளராகவும் பின்னர் மதுரை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராகவும் திறம்பட பணியாற்றியவர்.

மதுரை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த போது அழகர்கோவிலில் நடைபெற்ற இளைஞர் அணி பயிற்சிப் பாசறைக் கூட்டத்தை சிறப்பாக நடத்தி என்னுடைய பாராட்டைப் பெற்றார்.

மாவட்டத்தில் இளைஞர் அணி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர். கிராமம் கிராமமாகச் சென்று கழக இளைஞர் அணி அமைப்பை உருவாக்க பாடுபட்டவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீது அளவற்ற அன்பு கொண்டவராகத் திகழ்ந்த வீரகணேசன் அவர்கள் என் மீது தீராப் பற்று கொண்டவர்.

நான் மதுரைக்கு வரும் போதெல்லாம் ஓடோடி வந்து வரவேற்ற காட்சிகள் இன்றும் என் மனக் கண்ணில் நிழலாடுகின்றன.

கழகத்தின் மீது மிகுந்த பற்று கொண்டு கழகப் பணியை செவ்வனே செய்துவந்த வீரகணேசன் அவர்கள் உடல் நலம் குன்றி மறைவுற்றார் என்ற செய்தியறிந்து மிகுந்த வேதனையடைந்தேன்.

வீரகணேசன் அவர்களை இழந்து வாடும் அன்னாரது குடும்பத்தாருக்கும், மதுரை மாவட்டக் கழகத்தினருக்கும் எனது ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## புதுக்கோட்டையில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

புதுக்கோட்டை, அக். 9–

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் 'உங்களுடன் ஸ்டாலின்'திட்ட முகாம் நடைபெற்றது. முகாமிற்கு விராலிமலை தாசில்தார் ரமேஷ் தலைமை தாங்கினார். இதில் பொதுமக்கள் வழங்கிய பல்வேறு மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டு அதற்கான சான்றிதழ்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மு.பி.மணி, பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், ஒன்றிய செயலாளர் அ.இளங் குமரன் மற்றும் விராலிமலை சிவா, மெடிக்கல் குமார், என்.வீராச்சாமி, த. ரெங்கராஜ், துரை முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசுத் துறை அலுவலர்கள், ஊராட்சி மன்ற செயலாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். முகாமிற்கான ஏற்பாடுகளை விராலிமலை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரவிச்சந்திரன், வள்ளியம்மை, ஊராட்சி மன்ற செயலாளர் கருப்பையா ஆகியோர் செய்திருந்தனர்.

## வலைதளங்களில் வலம் வருகிறது!




வேலூர் மாவட்டம் காட்பாடியில் புதிய சார் பதிவாளர் அலுவலக கட்டடத் திறப்பு விழா!

# மக்களுக்காக உழைப்பதை தவிர எனக்கு வேறு பணி இல்லை!

## கழக பொதுச் செயலாளர் - நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் நெகிழ்ச்சி!

வேலூர், அக்.9–

மக்களுக்காக உழைப்பதை தவிர எனக்கு வேறு பணி இல்லை என காட்பாடியில் புதிய சார்பதிவாளர் அலுவலக கட்டிடத்தை திறந்து வைத்து அமைச்சர் துரைமுருகன் நெகிழ்ச்சியாக பேசினார்.

வேலூர் மாவட்டம் காட்பாடியில் ரூ.1.87 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய சார்பதிவாளர் அலுவலக கட்டிட திறப்பு விழா நடந்தது. விழாவிற்கு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவு துறை அரசு செயலாளர் ஷில்பா பிரபாகர் சதீஷ் தலைமை தாங்கி பேசினார். வேலூர் மாவட்ட கலெக்டர் ஆட்சியர் வே.இரா.சுப்பு லெட்சுமி, குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலு விஜயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்த குமார், துணை மேயர் எம்.சுனில்குமார், மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா ஆகியோர் முன்னிலை வகித்து பேசினர்.

பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் திட்ட



விளக்க உரையாற்றினார். துணை பதிவுத்துறை தலைவர் அருள்சாமி வரவேற்றார். சிறப்பு விருந்தினர்களாக நீர்வளத்துறை அமைச்சர் கழக பொதுச் செயலாளர் துரை முருகன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் மூர்த்தி கலந்து கொண்டு கட்டடத்தை திறந்து வைத்தனர்.

விழாவில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசியதாவது:

நிகழ்ச்சியில் கலந்துகொண்டு இங்கு பேசியவர்கள் அனைவரும் இந்த தொகுதிக்கு நான் என்ன செய்திருக்கிறேன் என்பதை பற்றி தெரிவித்தார்கள். என்னை தேர்ந்தெடுத்த இந்த தொகுதிக்கு செய்ய வேண்டியது என்பது என்னுடைய கடமை. அதைத்தான் நான் செய்து கொண்டிருக்கிறேன்.

பதிவுத்துறை அமைச்சர் மிக சிறப்பாக செயல்பட கூடியவர். அவர் ஒரு மிகச்சிறந்த விவசாயியும் கூட. என்னுடைய 50 ஆண்டுகால பொதுவாழ்க்கையில் இந்த காட்பாடி தொகுதிக்கு தாலுகா அலுவலகம், சட்டக் கல்லூரி, கலைக்கல்லூரி, நீதிமன்றம் என பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி உள்ளேன். என் கடன் பணி செய்து கிடப்பதே என்பது போல பணிகளை செய்து கொண்டிருக்கிறேன். யார் என்ன சொன்னாலும் தேர்தல் காலத்தில் யார் யாரோ வருவார்கள். கடந்த 50 ஆண்டுகளாக உங்களுக்கு உழைப்பதை தவிர எனக்கு வேறு பணி இல்லை. இவ்வாறு அவர் பேசினார்.

வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் மூர்த்தி பேசியதாவது:

பதிவுத்துறை அலுவலகங்கள் என்பது அரசு சார்ந்த அலுவலகங்களாக மட்டுமல்லாமல் மக்கள் வருகின்ற இடங்கள். அந்த இடங்களிலே மக்கள் தங்களுடைய பதிவுகளை நல்ல முறையிலே மேற்கொண்டு திருப்திகரமாக செல்ல வேண்டும். அடிப்படை வசதிகளுடன் சார் பதிவாளர் அலுவலக கட்டிடங்களை உருவாக்க வேண்டும் என்று முதல்வர் உத்தரவிட்டார். அதன் அடிப்படையில் ஒவ்வொரு பதிவுத்துறை அலுவலகங்களிலும் பொதுமக்கள் எளிதில் அணுக கூடிய வகையிலும் அவர்கள் அமர்ந்து தங்களுடைய பதிவுகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய வகையிலும் அமைக்கப்பட்டு வருகிறது. அரசுக்கு வருவாயை ஈட்டி தரும் துறைகளிலே 2வது இடத்தில் இந்த பதிவுத்துறை இருக்கிறது. பதிவுத்துறையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. முதல்வ ருக்கு பெண்கள் மத்தியிலே ஏற்பட்டுள்ள பேராதரவும், எழுச்சியும் இந்தியாவில் எந்த ஒரு முதல்வ ருக்குமே இல்லை. பெண்களுக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்து வருகிறார்.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, காட்பாடி ஒன்றிய குழுத்தலைவர் வேல்முருகன், துணைத்தலைவர் எஸ்.சரவணன், காட்பாடி சார்பதிவாளர் பிரகாஷ், மாநகராட்சி கவுன்சிலர்கள் ஜி.ரவிக்குமார், சித்ரா மகேந்திரன், ஜி.சீனிவாசன், தாசில்தார் ஜெகதீஸ்வரன், பகுதி செயலாளர் வன்னியராஜா, ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.தணிகாசலம்,

கே.கருணாகரன்,சி.ரவி,வட்ட செயலாளர் விநாயகம் வேலூர் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் கே.முரளி பாஸ்கர்உள்பட பலர் கலந்து கொண்டனர். காந்தி வேடம் அணிந்து வந்த முதியவர் அமைச்சர் துரைமுருகன் அவர்களிடம் கோரிக்கை மனு அளித்தார்.

முடிவில் மாவட்ட பதிவாளர் ராஜா நன்றி கூறினார்.

பத்திரப்பதிவில் அடுத்த மாதத்தில் 3.0 அமல் அமைச்சர் மூர்த்தி தகவல் தொடர்ந்து பத்தரப்பதிவு துறை அமைச்சர் மூர்த்தி நிருபர்களிடம் கூறுகையில்,

பத்திரப்பதிவு அலுவலங்களில் அடிக்கடி அந்த சர்வர் பிரச்சனை வரும். பத்திரப்பதிவு அலுவலக்தில் செயல்படுத்தப்படும் 2.0ல் பத்திரத்தின் பதிவெண்ணை பதியக்கூடிய எண்ணிக்கை கூடி இருக்கிறது. அதனால் சர்வர் பிரசனை உள்ளது. பத்திரப்பதிவில் 3.0 மிக விரைவில் கொண்டு வரப்பட உள்ளது. 3.0 வேகமாக இருக்கும் மிக விரைவில் அறிவிக்கப்படும் அப்போது எந்தவிதமான தடையும் இருக்காது. தற்போதைய சர்வர் பிரச்சினை சரியாகிவிடும். 3.0 அடுத்து ஒரு மாதத்தில் அறிவிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# திருச்சியில் மாணவர்களுக்கான கைப்பந்துப் போட்டி!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்!

*திருச்சி, அக். 9 -*

*திருச்சி அண்ணா விளையாட்டு அரங்கில் தொடங்கிய பள்ளி மாணவர் பிரிவுக்கான கையுந்து பந்து போட்டிகளை மாவட்ட ஆட்சியர் சரவணன் முன்னிலையில், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்து பார்வையிட்டு விளையாட்டு வீரர்களிடம் கலந்துரையாடினார்.*

*இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்விசேஷத்ரிமயும் தீபிசானு. மண்டல குழு தலைவர் மு.மதிவாணன், தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நிலமெடுப்பு) ஆர்.பாலாஜி, மேலாளர் (விளையாட்டு விடுதிகள் சென்னை) மகேஸ்வரி. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர்கள், பயிற்சியாளர்கள், மேலாளர்கள், மாவட்ட விளையாட்டு அலுவலர் திருமதி.ஞான சுகந்தி, அரசு அலுவலர்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.*

*தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான மாநில விளையாட்டு போட்டிகள் தொடங்கி, பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்று வருகிறது. இதில் பொது பிரிவினர், பள்ளி, கல்லூரி மாணவர்கள், மாற்றுத்திறனாளிகள், அரசு ஊழியர் என 5 பிரிவுகளில், ஆண் பெண் இருபாலரும், பங்கேற்கும் வகையில் 32 விளையாட்டுக்கள் 37 வகைகளில், மாவட்ட மண்டல அளவில் நடைபெற்று வருகிறது. இதில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.*

*போட்டியின் 6வது நாளான இன்று (அக்.7) பள்ளி மாணவர், மாணவியர் பிரிவுக்கான கையுந்து பந்து (Volley Ball) போட்டிகள், திருச்சி அண்ணா விளையாட்டு அரங்கில் இன்று தொடங்கியது. இன்று முதல் 10 ஆம் தேதி வரை மாணவர்களுக்கும், 10 ஆம் தேதி முதல் 13 ஆம் தேதி வரை மாணவிகளுக்கும் போட்டிகள் நடைபெற உள்ளது. இந்த போட்டியில் 38 மாவட்டங்களில் இருந்து 555 வீரர்கள், 570 வீரங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர்.*

*நிகழ்ச்சி நிறைவாக செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டி:-*

*கல்வி உரிமை சட்டத்தில் இணைய விண்ணப்பிக்கும் இணைய தளம் முடங்கி இருப்பதாக கூறப்படுகிறது. அது குறித்து ஆராய்ந்து தேவைப்பட்டால் விண்ணப்பிக்க காலக்கெடு நீடிப்பது குறித்து முடிவெடுக்கப் படும்.*

*ஒன்றிய அரசு கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆர்.டி.இக்கு வழங்க வேண்டிய நிதியை ஒதுக்கவில்லை. அவர்கள் முறையாக ஒதுக்கியிருந்தால் சராசரியாக 60 ஆயிரம் மாணவர்கள் பயனடைந்திருப்பார்கள். ஒன்றிய அரசு நிதியை ஒதுக்காவிட்டாலும் மாநில அரசு அந்த நிதியை ஒதுக்கியது.*

*இனியாவது ஒன்றிய அரசு எந்த அரசியலும் பார்க்காமல் கல்விக்கான நிதியை கால தாமதமின்றி வழங்க வேண்டும்.*

*இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேட்டி அளித்தார்.*



திருப்பத்தூர் வருகை தந்த மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் அருட்தந்தை செ.சோ. அருணிடம் கோரிக்கை மனுவை அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. வழங்கினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருப்பரங்குன்றம் ஆர்.கோபால்சாமி

**அக்டோபர் 9 (1992)**



திருப்பரங்குன்றம் கிளைக் கழகச் செயலாளராகவும், 1965இல் திருப்பரங்குன்றம் பேரூராட்சி மன்ற உறுப்பினராகவும், 1980 முதல் 1992 வரை ஒன்றுபட்ட மதுரை மாவட்டக் கழக அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

1962இல் திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற தி.மு.க. 3வது மாநில மாநாட்டில் சிறப்பாகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வுப் போராட்டம், ஆகிய போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

அவசரநிலையின் போது மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆர்.ஏ. வீராசாமி

**அக்டோபர் 9 (2020)**



தனது இளம் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

மாவட்டப் பிரதிநிதியாகவும், நாகை நகரக் கழகச் செயலாளராக இரு முறையும் பொறுப்பு வகித்து கழகம் வளர பாடுபட்டவர்.

நாகை நகர வீடு கட்டுவோர் கூட்டுறவு சங்கத் தலைவராகவும் – நாகப்பட்டினம் நகர் மன்ற உறுப்பினராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, அதனை முன்னெடுத்து நடத்தியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**